357

உ

ஓம் குஹாய நம:

திருப்புகழமிர்தம்

(All Rights Reserved)

" குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் ருள்போற்றும்
திருப்புகழைக் கேளீர் தினம்."

மலர் 3. Vol 3. | வெகுதான்ய வருடம் பங்குனிமீ 1உ மார்ச்சு—1939 | இதழ் 12. No. 12.

திருப்புகழ்.

(பழநி)

கருவினுரு வாகிவந்து வயதளவி லேவளர்ந்து
கலைகள்பல வேதெரிந்து மதனாலே

கரியகுழல் மாதர்தங்க ளடிசுவடு மார்புதைந்து
கவலைபெரி தாகிநொந்து மிகவாடி

அரகரசி வாயவென்று தினமுநினை யாமலின்று
அறுசமய நீதியொன்று மறியாமல்

அசனமிடு வார்கள்தங்கள் மனைகள்தலை வாசல்நின்று
அநுதினமு நாணமின்றி அழிவேனோ

உரகபட மேல்வளர்ந்த பெரியபெரு மாளரங்க
ருலகளவு மான்மகிழ்ந்த மருகோனே

உபயகுல தீபதுங்க விருதுகவி ராஜசிங்க
உறைபுகலி யூரிலன்று வருவோனே

பரவைமனை மீதிலன்று ஒருபொழுது தூதுசென்ற
பரமனரு ளால்வளர்ந்த குமரேசா

பகையசுரர் சேனைகொன்று அமரர்சிறை மீளவென்று
பழநிமலை மீதில்நின்ற பெருமாளே.

பதவுரை.

உரக படம் மேல் வளர்ந்த - ஆதிசேடனாகிய பாம்பின் படத்தின்மீது கண்வளர்ந்து அறிதுயில்புரிகின்றவரும், பெரிய பெருமாள்- பெருமையிற் சிறந்த பெருந் தகைமையுடையவரும், அரங்கர்- திருவரங்கம் என்னுந் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ளவரும், உலகு அளவு மால் - (மாபலிபால் மூவடிகேட்டு) உலகை ஓர் அடியால் அளந்தவருமாகிய திருமால், மகிழ்ந்த மருகோனே- திருவுள்ளம் மகிழ்ந்து மதிக்கத்தக்க மருகரே! உபயகுலதீப- தாயின்குலம் தந்தையின்குலம் என்னும் இருகுலங்களையும் விளக்கவந்த தீபமே! துங்க- பரிசுத்தமுடையவரே! விருது கவிராஜசிங்க- கொடி சிவிகை தாளம் முதலிய விருதுகளையுடைய அருட்கவிராஜசிங்கமே! உறை புகலி ஊரில் அன்று வருவோனே- வசிப்பதற்குத் தகுதியான சீகாழிப்பதியில் அந்நாளில் திருஞானசம்பந்த மூர்த்தியாகத் திருவவதாரம்புரிந்து வந்தவரே! பரவைமனை மீதில்- பரவை நாச்சியார் திருமனைக்கு, அன்று ஒருபொழுது தூது சென்ற- அன்றொருநாள் (அவர்கொண்ட ஊடலைத் தணிக்கும் பொருட்டு சுந்தரமூர்த்திநாயனருக்காகத்) தூதுசென்றருளிய, பரமன் அருளால் வளர்ந்த- எப்பொருட்கும் இறைவராகிய சிவபெருமானது திருவருளால் வளர்ந்தருளிய, குமர- குமாரக்கடவுளே! ஈசா - இறைவரே! பகை அசுரர் சேனைகொன்று- தேவர்களிடத்துப் பகைகொண்ட அசுரர்களது சேனைகளைக் கொன்று, அமரர்சிறை மீளவென்று-தேவர்கள் சிறையினின்று நீங்கி மீண்டுவர சூராதிகளை வென்று, பழநிமலை மீதில் நின்ற - பழநிமலையின்மேல் என்றும் இன்பந்தருமாறு நின்றருளிய, பெருமாளே- பெருமையின் மிக்கவரே! கருவின் உருஆக- தாயாரது கருப்பையில் ஒருவடிவத்தைப் பெற்று, வந்து- உலகில் குழந்தையாகப் பிறந்து, வயது அளவிலே வளர்ந்து- வயதின் அளவு அளவாக செழிப்புடன் வளர்ந்து, கலைகள் பல (எ- அசை) தெரிந்து- பலநூல்களைப் படித்து உணர்ந்துகொண்டு, மதனாலே கரிய குழல் மாதர்தங்கள்- (படித்ததன் பயனை யுணர்ந்து அதனைப் பெறுதற்கு முயற்சிசெய்யாமல்)மன்மதனுடைய மலர்க் கணையினால் மயங்கி கருமைநிறமுடைய கூந்தலோடுகூடிய பெண்களது, அடிசுவடு மார்பு தைந்து- கலவியில் அப்பெண்களின் பாதச்சுவடு அடியேனது மார்பில் புதையும்படி விளையாடி, கவலை பெரிது ஆகி நொந்து - மிகவும் துன்பத்தையுடையவனாகி மனம் வருந்தி, மிகவாடி - மிகவும் வாட்டத்தை யடைந்து, அரகர சிவாய என்று- அரஹர சிவாய என்ற திருநாமங்களைச் சொல்லி, தினமும் நினையாமல் நின்று- நாள்தோறும் நெஞ்சில் அன்புடன் நினையாமல் (வெறுமரம்போல்) நின்று, அறுசமயநீதி ஒன்றும் அறியாமல்- ஆறுசமயங்களின் நீதிகளில் ஒன்றையேனும் அறிந்து கொள்ளாமல், அசனம் இடுவார்கள் தங்கள் மனைகள் தலைவாசல் நின்று- (வயிற்றை வளர்ப்பதையே குறிக்கோளாகக்கொண்டு) சோறு போடுகிறவர்களுடைய வீடுகள் தோறும் சென்று அவ்வீட்டின் தலைவாசலில் நின்று, அநுதினமும் நாணம் இன்றி

உழல்வேனே- நாள்தோறும் சிறிதும் வெட்கமில்லாமல் சுழன்று கெடுவேனே? (அங்ஙனம் கெடாமல் உம்மையடைந்து உய்வேன்.)

பொழிப்புரை.

ஆதிசேடனாகிய பன்னகப் பாயலின்மேல் அறிதுயில்கொண்டு திருக்கண்வளர்கின்றவரும், மிகுந்த பெருமையை யுடையவரும் திருவரங்கம் என்னும் திருத்தலத்தில் உறைபவரும், பலிச்சக்கிரவர்த்தியிடம் மூவடிகேட்டு ஓரடியால் உலகமுழுவதும் அளந்தவரும் ஆகிய நாராயண மூர்த்தி மிகவும் மகிழ்கின்ற மருகரே! தாய் தந்தை என்னும் இருகுலங்களையும் விளங்கச்செய்யவந்த ஞானதீபமே! தூய்மையானவரே! சிவிகை கவிகை கொடிமுதலிய விருதுகளுடைய அருட்கவிராஜ சிங்கமே! நலன்கள் யாவுக்கும் உறையுளான சீகாழியில் (சைவசமயம் மங்கியிருந்த அந்நாளில்) திருஞானசம்பந்தராகத் திருவவதாரம் செய்தருளி வந்தவரே! (சுந்தரமூர்த்தியிடம்ஊடல்கொண்ட)பரவையம்மைத்திருமனைக்கு அந்நாளில் தமது திருத்தொண்டர் பொருட்டு தூதுசென்றருளிய சிவபெருமா னுடைய திருவருளால் வளர்ந்த குமாரக்கடவுளே! தலைவரே!பண்ணவர்பால் பகைகொண்ட அசுரசேனையையழித்து, தேவர்கள் சிறையை யொழித்து, சூராதிகளை வென்று பழநிமலை மேல்எழுந்தருளியுள்ள பெருமாளே! தாய்வயிற்றிற் கருவிலிருந்து உருப் பெற்று பூமியிற் பிறந்து கிரமப்படி வளர்ந்து பலகலைகளைக் கற்றுணர்ந்து, மன்மதனது செயலால் மயங்கி,கரியகூந்த லுடைய காரிகையர்களது கலவியில்மூழ்கி, அவர்கள் பாதச்சுவடு என் மார்பிற்படுமாறு லீலைகள்செய்து, அதனால் பெருங் கவலையுற்று மனம் நொந்து மிகவுஞ் சோர்வுற்று, ஹர ஹர சிவ சிவ என்ற திருமந்திரங்களை நாள்தோறும் நினையாமலும், ஆறுசமயநீதிகளில் ஒன்றையேனும் உணராமலும்,(சோற்றுப்பையை நிரப்புவதையே பிறவியின் நோக்கமெனக்கொண்டு) சோறுபோடுபவர்கள்வீட்டின் தலைவாசலில்போய் நின்று நாள்தோரும் சிறிதும் நாணமின்றி அலைந்து உழன்று அழிவேனோ? (அங்ஙனம் அழியாது உமது அருட்சோற்றைநாடி ஆலயத்தின்முன்வந்து நிற்கக்கடவேனாக.)

விரிவுரை.

கவலைபெரிதாகி நொந்து மிகவாடி:-

மதனன் மலர்க்கணையால் மயங்கி,மதிகெட்டு விலைமகளிரிடம் செல்வோர் திருவெலாந்தந்து வறுமையும் நோயும் கொண்டு, பழி பாவம் பகை இவைகளைப் பெற்று அதனால் அளக்கரும் அல்லல் களையடைந்து,பண்டைத்தனது பெருமிதத்தை உன்னி உன்னி உள்ளம் உடைந்து மனம் மறுகி மாழ்குவர்.

அர கர சிவாய என்று தினமும் நினையாமல்:-

அறியாமையாலும், அறிஞர்களின் கூட்டுறவின்மையாலும். நெறிதவறி பாவங்களைச் செய்தவர்கள்,அப்பாவங்களினின்றும்விடு பட்டுஉய்ய வேண்டுமாயின் அரனுமத்தை யிடைவிடாது சிந்தித் தல் வேண்டும். அரன்-பாவத்தை யழிப்பவன் என்பது பொருள். எனவே பாவநீக்கத்திற்கும் பரகதியின் ஆக்கத்திற்கும் அரனு மத்தை நினைப்பதே சிறந்த சாதனமாம்.

'நாக்கைக் கொண்டரன் நாமநவில்கிலார்'

---அப்பர்சுவாமிகள்.

அரகா என்று அன்புடன் ஓதுபவர்க்குக் கிடைக்கத்தகாத பொருள் மூவுலகங்களிலு மில்லை. அரகா என்பார்களுக்கு அரிய செயல் ஒன்றுமில்லை. அரகாஎன்போர் தேவர்களுமாகிப் பிறங்கிப் பெருமித மூறுவர். அரகா என்று அனுதினமும் ஓது வார்க்குப் பிறவி நோயும் எளிதில் நீங்கும்.

அரகா வென்ன அரியதொன் றில்லை
அரகா வென்ன அறிகிலர் மாந்தர்
அரகா வென்ன அமரரு மாவர்
அரகா வென்ன அறும்பிறப் பன்றே.

---திருமந்திரம்.

சிவாய என்பது பஞ்சாட்சரத்தின் பகுதியாம். சிவாய என்று உச்சரித்தவுடன், மனமாசுகளும் மலமாசுகளும் நீங்கி வரம்பிலாவாழ்வு பெறுவார்.

"சிவாயமெ னுநாமமொ ருகாலுநி னையாததி
மிராகனை வாவென் றருள்வாயே"

---திருப்புகழ்.

சிவாயவொ டவ்வே தெளிந்துள்ளத் தோதச்
சிவாயவொ டவ்வே சிவனுரு வாகும்
சிவாயவொ டவ்வுந் தெளிய வல்லார்கள்
சிவாயவொ டவ்வே தெளிந்திருந் தாரே.

---திருமந்திரம்.

ஆதலால், பிறவிப் பிணியைநீக்கிப் பிறவாப்பெற்றியைப் பெறுதற்கு அவாவும் பேரன்பர்கள் எக்காலமும் இம்மந்திரசிரோமணியைத் தைலதாரைபோல் இடைவிடாது சிந்திப்பார்களாக. செம்மேனிப் பெம்மான் திருவருள் துணைசெய்யுமாக.

அறுசமய நீதி:-

சைவசமயத்திற்குள் அகச்சமயங்கள் ஆறு. அவை: சைவம், பாசுபதம், மாவிரதம், காளாமுகம், வாமம், வைரவம் என்பன.

இவையேயுமன்றி வைதிகசமயங்கள் ஆறும்உள. அவை:- சைவம், வைணவம், காணுபத்யம், கௌமாரம், சாத்தேயம், சௌரம் என்பன.

அசனமிடுவார்கள்... அழிவேலை:-

உயிர்க்கு உறுதிபயக்கும் சன்மார்க்க நெறியைச் சார்ந்து, அந்நெறியில் தம்மைஉய்க்கும் சான்றோர்களது தலைவாசலிற் சென்று நிற்க வேண்டும். அங்ஙனம் நிற்காமல் கேவலம் வயிற்றை வளர்க்கும் பொருட்டு அச்சோறிடுவார் தலைவாசலிற்போய் நாள்தோறும் நிற்பது வெட்கக்கேடாம். உடற்பசியை நீக்கமுயல்வதோடு உயிர்ப்பசியை நீக்கவும் விரைந்து முயலுதல் வேண்டும்.

"இரைதேடுவ தோடு இறையையுந் தேடு"

--- பாம்பனடிகள்.

உரகபடமேல்வளர்ந்த பெரியபெருமாள்:-

உரகமென்பது குண்டலிசக்தி, அதன்மீது பகவான் பள்ளிகொண்டு யோகநித்திரை செய்கின்றார். அவர் அவ்வறி துயில் செய்கின்றதனால் உலகில் உயிர்கள் இன்புறுகின்றன. அத்தூக்கமே பேரின்பநிலையாம்.

தூங்கிக் கண்டார் சிவ லோகமுந் தம்முள்ளே
தூங்கிக் கண்டார் சிவ யோகமுந் தம்முள்ளே
தூங்கிக்கண்டார் சிவ போகமுந் தம்முள்ளே
தூங்கிக் கண்டார் நிலைசொல்வ தெவ்வாறே

---திருமந்திரம்.

உலகளவுமால்:--

உரகணைச் செல்வன் உலகளந்த வரலாறு

இரணியனுடைய புதல்வர் பிரகலாதர்;பிரகலாதருடையபுதல்வன் விரோசனன்;விரோசனனுடையமைந்தன் பலி.இந்தப்பலி இந்திரனால் எல்லா நலன்களையும் இழந்து,பிருகுவமிசத்தில்வந்த மகரிஷிகளையடுத்து அவர்களுக்குச்சீடனாக இருந்தான். அம்முனிவர்கள் அப்பலியின் க்ஷேமத்தைக்குறித்து விசுவசித்து என்ற ஒருயாகத்தைச்செய்தார்கள். கதிரவன் குதிரைகட்கு நிகரான புரவிகள் பூட்டிய பொற்றேரும், சிங்கக்கொடியும், பெரியவில்லும், குறையாத அம்பறாத்தூணிகள்இரண்டும், உறுதியான கவசமும் அந்தயாகத்தில் உண்டாயின. இவைகளைப் பலிக்கு முனிவர்கள் வழங்கினர். பிதாமகரான பிரகலாதர் வாடாத பத்மமாலையையும், சுக்கிரர் ஒருசங்கத்தையும் அவனுக்குக்கொடுத்தார்கள். பலிபொற்றேரில் ஊர்ந்து சங்கத்தொனி செய்து உலகங்களை யெல்லாம் நடுங்கச் செய்தான். அசுர சேனைகள் சூழ இந்திர னுலகிற் சென்று முற்றுகையிட்டு சங்கத்தை ஊதினான். இந்திரன் பலியின் படை பலத்தையும் முனிவர்கள்தந்த வரங்களையும் உணர்ந்து பயந்து சுவர்க்க லோகத்தைவிட்டு தேவர்களுடன் ஒளிந்து ஓடினான். பலியானவன் மூன்று உலகங்களையும் வசப்படுத்திக்கொண்டு ஆட்சி புரிந்துவந்தான். பிறகு நூறு அசுவமேத யாகங்களைச்செய்து பெரும் புகழ் படைத்து சகலசம்பத்துடன் விளங்கினான்.

தேவமாதா வாகிய அதிதி தேவி தன் மக்களாகிய தேவர்களுக்கு தைத்யர்களாலே உண்டான துன்பத்தை யறிந்து தன் கணவராகிய கசியபரைக் குறித்துத் தவமிருந்தாள். வெகுகாலத்திற்குப்பின் காசிபர் சமாதியினின்றும் வெளிப்பட்டு அதிதியின் பால்வர, அதிதி கணவனைக்கண்டு முறைப்படி பூசித்து என்புதல்வர்க்கு வாழ்வு உண்டாகு மாறு அருள்புரிவீர்'' என்று வேண்டி

ளுள். காசிபர் "பெண்மணியே! வருந்தற்க. எனது பிதாவாகிய பிரமதேவர் எனக்கு உபதேசித்த இதனை அனுஷ்டிப்பாயாக. பால்குண மாதம் சுக்கிலபட்சத்திலே பிரதமைமுதல் பன்னிரண்டு நாள் மிகுந்த பயபக்தியுடன், பாற்கடலில் பள்ளிகொண்ட பரந்தாமனை வழிபாடு செய்வாய். இதற்குப் பயோவிரதம் என்றுபேர். இவ்விரதபலத்தால் எண்ணிய நலனை நீ விரைவில் பெறுவாய்" என்று அப்பயோவிரதத்தை நோற்கும் முறைகளையும் துவாதசாக்ஷர மகா மந்திரத்தையும் உபதேசித்து அருள்புரிந்து காசிபர் நீங்கினர்.

அதிதிதேவி அந்த அரிய விரதத்தை அன்புடன் அனுஷ்டித்து அரவணைச்செல்வனை வழிபட்டனள். வாசுதேவர் சங்கு சக்ர கதா கட்கசேடகத்துடன் அவள்முன் தோன்றியருளினர். அதிதி பெருமானைத் தெரிசித்து அஞ்சலி செய்து துதித்து தன் குறைகளை விண்ணப்பித்து நின்ருள். பகவான் "அம்மா! அதிதி தேவியே! நின்னுடைய மைந்தர்களாகிய வானவர்கள்சுவர்க்கத்தை யிழந்துபலியினல் துன்புறுவதைக்கண்டு மிகவும் வருந்தி என்னை ஆராதித்தனை. தேவர்களுக்கு இப்போது நற்காலமில்லை. அவர்களுக்கு பராக்கிரமம் இப்போது உண்டாவது அரிது. ஆயினும் நின் விரதபலத்தால் உண்டாக்கிவைக்கின்றேன். உனது பதியினிடத்தில் என்னுடைய இந்த உருவத்தைத்தியானித்து புத்திர பாக்கியத்தை யடைவாயாக. உனது துன்பத்தைநீக்கி தேவர்கட்கு இன்பத்தைத் தருவதற்காக நான் நினக்கு மைந்தனுக வருவேன்" என்று சொல்லி மறைந்தருளினர். அதிதி மிகவும் மகிழ்ந்து பகவானைத் தியானித்து பதியாகிய காசிபரை யடைந்தாள். அரியினுடைய அமிசம் தன்னிடம் வந்து சேர்ந்ததை சமாதியினுலறிந்த காசிபர் அந்த அரியின் அமிசத்தை அதிதியினிடம் ஸ்தாபித்தார். காசிபரால் கர்பாதானம் செய்யப்பட்ட அதிதி கருவிருந்தாள். பகவான் நீலநிறத்தை யுடையவராயும், இருமகர குண்டலங்களை யுடையவராயும், ஸ்ரீ வச்சம் என்னும் மருவை வக்ஷசிலேயுடையவராயும், கவுஸ்துப மணியையும் மணி மகுட ஆரகேயூர இரத்தினலங்க்ருதராயும் அதிதியினிடத்தில், சுக்கிலபட்ச சிரவண துவாதசியில் ஸ்ரீ வாமனமூர்த்தியாகத் திரு

வவதாரம் புரிந்தார். தேவதுந்துபி முழங்கிற்று. விண்ணவர் தண்மலர் பொழிந்தனர். வாமன மூர்த்தியைக் கண்டு அதிதி தேவியும் காசிபமுனிவரும் மட்டற்ற மகிழ்ச்சி யடைந்தார்கள். அருந்தவமுனிவர்கள் சாதகருமம் முதலிய வைதீக கருமங்களைச் செய்துவைத்து உபநயனமும் செய்துவைத்தனர். வாமனமூர்த்திக்கு கதிரவன் காயத்திரியை உபதேசித்தான். பிரகஸ்பதி பிரம சூத்திரத்தைக்கொடுத்தார். கசியபர் முஞ்சியைக் கொடுத்தார். பூமிதேவி கிருஷ்ண சனத்தைக் கொடுத்தாள். சந்திரன் தண்டத்தைக் கொடுத்தான். பிரமா கமண்டலபாத்திரத்தைக் கொடுத்தார். குபேரன் பாத்திரத்தைக் கொடுத்தான். உமா தேவியார் பிக்ஷையைக் கொடுத்து ஓமஞ் செய்தார்.

வாமனமூர்த்தி அதன்பிறகு பலிச்சக்கிரவர்த்தி பிருகுவமிச முனிவர்களைக்கொண்டு செய்கின்ற அசுவமேத யாகசாலையிற் புகுந்தார். அவருடைய திருமேனியின் ஒளியால் அக்கினியும் ஆதித்தனும் ஒளிமழுங்கினுர்கள். யாகசாலையி லுள்ளோர் அவரைக்கண்டு வியப்புற்ருர்கள். அவரைக்கண்டு யாகபதியாகிய பலி எழுந்து எதிர் சென்று அடிவணங்கி ஆசனந் தந்து திருவடியைப் பூசித்து அப்பாதநீரைத்தன் தலையிற் றெளித்துக் கொண்டு, "இன்றே அடியேன் புனிதனுயினேன். உங்கள் வரவு நல்வரவு, உமதுபார்வையால் அடியேன் பரிசுத்த மடைந்தேன். உமது பாதோதகத்தால் என்பாவமெல்லாம் நசித்தன. என் பிதிரர்களும் மகிழ்வுற்ருர்கள். யாசிக்கவந்தவராக உம்மைக் குறிப்பினுலுணர்கிறேன், வேண்டியபதைக்கேளும்; உடனேதருகிறேன்" என்று கூறினுன்.

பகவான் பலியின் அந்த இதமான வசனங்களைக் கேட்டு மகிழ்ந்து, "மூவுலகாதி பதியே! உனக்கு பிரகலாதரும் பிருகு வமிசமுனிவரும் குருவாக இருக்கின்றுர்கள். உமது வார்த்தை ஒருபொழுதும் பொய்க்காது. யாசிக்கும் யாசகனுக்கு எந்த தாதாகொடுக்கிறேன் என்று சொல்லிவிட்டுப் பின் இல்லையென்று அவமானம் பண்ணுகிறுனே அவன் இந்தக்குலத்தில் இல்லை. பிரகலாத பேரனுகிய நீ சொற் சோர்வுபடாதவன். உனது பிதாவாகிய விரோசனன் வேதியவுருக்கொண்ட விண்ணவர்க்குத் தன்

ஆயுளையெல்லாங் கொடுத்தான். அத்தகைய புகழ்பெற்ற குலத்தில் பிறந்த உன்னிடத்தில் என்னுடைய அடியினால் அளக்கப்பட்ட மூன்றடி பூமியை யாசிக்கிறேன். சக்கிரவர்த்தியும் மகா தாதாவுமாகிய நீ இதனைக் கொடுப்பாயாக" என்றார். பலிச்சக்கிரவர்த்தி புன்முறுவல் கொண்டு "ஐயா ! நீர் சிறுபிள்ளையா யிருப்பதால் சிறுபயனை விரும்புகிறீர் மூன்றுத்வீபத்தையும் கொடுக்குந் தகுதியுடைய என்னைப் புகழ்மொழிகளால் பூசித்து மூன்றடியை யாசிக்கிறீர் வேண்டாம் நிரம்ப விசாரமான பூமியைக் கேளும்." என்றான். பகவான், "பலியே! ஆசைக்கோ அளவில்லை. மூன்றடியால் திருப்தி யடையாதவன் மூவுலகங்களாலும் திருப்தி யடையமாட்டான். நான்கேட்ட மூன்றடி யிடத்தைக் கொடுத்தால்போதும்" என்றார். பலிச்சக்கிரவத்தி "அப்படியே பெற்றுக் கொள்ளும்" என்று பூதானம் செய்ய நீர்ப்பாத்திரத்தைக் கொண்டு வந்தான். அப்போது சுக்கிராசாரியர் தனது சீடனாகிய பலியைநோக்கி, "அன்பனே! இங்குவாமனனாய்வந்திருப்பவன் ஸ்ரீமந் நாராயணனே யாவன். இவன் அதிதிமைந்தனாய் தேவர்கட்கு அநுகூலம்புரிய வந்திருக்கிறான். இவன் வஞ்சனைக்கு மயங்கி விடாதே! வஞ்சனையாய் யாசிப்பவர்கட்குக் கொடுக்கப்படாது. இந்தத் தானத்தால் நீ அழிவதுதிண்ணம். நின்னைச் சார்ந்தவர்களும் அழிவார்கள். ஆபத்தில் பொய்சொல்லலாம். ஆதலால் நீ அவசரப்பட்டு இவர்கேட்டதைக் கொடுத்து துன்பத்திற்கு ஆளாகாதே" என்று தடுத்தனர். பலிச்சக்கிரவர்த்தி "குருநாதா! பிரகலாத பேரனாகியநான் ஒருபோதும் அசத்தியனாகமாட்டேன். உயிர்நீங்கினும் கொடுக்கிறேன் என்றதைக் கொடுக்காமல் ஒளிக்கமாட்டேன். பூமிதேவி "பொய்யனைத் தவிர மற்றவர்களைச் சிரமமின்றி தாங்குகிறேன்" என்று சொன்னாளல்லவா? நரகமே எனக்கு வரினும் இல்லை என்று சொல்ல இசையேன். தருமமே சிறந்த துணைவன். ஈந்துவக்கும் இன்பமே பெரிய இன்பம். ஈதலும் இசையுடன் வாழ்தலும் உயிர்க்குச்சிறந்த ஊதியங்களாம். ஆதலால் இவ்வாமனருக்கு இதனைத்தந்து பொன்றாப் புகழைப் பெறுவேன்" என்றான். சுக்கிராசாரியர் "விதியினால் ஏவப்பட்ட மூடனே ! என் ஆணையை அவமதித்த நீ விரைவில் எல்லா ஐஸ்வரியங்களையும் இழப்பாயாக" என்று சபித்தார். பலி

அதனால் சற்றும் சலிப்புறாது வாமனமூர்த்தியை முறைப்படிப் பூசித்து தண்ணீர் தாரைவிட்டு "மூன்றடியைக் கொடுத்தேன்" என்றான். அப்போது பலியின் மனைவியாகிய விந்தியாவலி என்பவள் சுவர்ணகும்பத்தில் நீர் கொண்டுவந்து வாமனர் பாதத்தை யலம்பினாள். அந்த பாதத்தீர்தத்தை பலி தலையிற்றெளித்துக் கொண்டு புனிதனானான். அவனது கொடையின் திறத்தைக் கொண்டாடி தேவர்களும் கந்தருவர்களும் துந்துபிகளை முழக்கி மலர் மாரி பொழிந்தார்கள்.

அப்போது வாமன மூர்த்தியின் திருவுருவளர்ந்து விசுவரூபங் கொண்டது. வாயுமண்டல சூரியமண்டல சந்திரமண்டல வன்னி மண்டலங்களை யெல்லாங் கடந்தன. எல்லாத்தேவர்களையும் ஏழுகடல்களையும் எண்டிசைப் பாலகர்களையும் எல்லா நதிகளையும் வேதங்களையும் பிறவற்றையும் அந்த அரியின் திருவுருவில் பலிச்சக்கிரவர்த்தி கண்டான். திரிவிக்கிரமனான திருமால் பூமண்டல முழுவதையும் ஓரடியாலும், சுவர்க்க லோகத்தை ஓரடியாலும் அளந்தார். மூன்றாவது அடிக்கு அணுவளவும் இடமில்லாமற் போயிற்று. பகவான் " பலியே ! உன்சொல்லை நிறைவேற்றுவாயாக. அசத்தியன் நரகிற் செல்லுவான். மூன்றாவது அடிக்கு இடம் எங்கே?" என்று கேட்க, பலி "தேவசிரேட்டரே! என்னுடைய சொல் பொய்க்காவண்ணம் உமது திருவடியை அடியேனது சென்னியில் வைத்தருள்வீர் நரகத்தையனுவிப்பதாயினும்சொன்னதை மாத்திரம்தவறமாட்டேன்" என்றான். அப்போது பிரகலாதர் தோன்றி "பெருமானைவணங்கி பலிஉம்மால் காப்பாற்றத்தக்கவன்" என்றார். பலியின் மனைவியாகிய விந்தியாவலி "எம்மை என்றும்காக்கவல்லவர் நீரே உலக பரிபாலனமூர்த்தியாகியநீர் உமதுஇயற்கையான கருணையால் காத்தருள்வீர்" என்றாள். பிரமதேவர் "எம்பெருமானே! சர்வசொத்தையும் உமக்குச்சமர்ப்பித்த இந்தப்பலியை விட்டுவிடும். இவன் காக்கத்தக்கவன். அறுகம்புல்லையும் சிறிது நீரையும் கொண்டுபூசித்தவன் உத்தமமான கதியை யடைகிறான். இந்தப்பலியோ உமக்கு மூன்று உலகங்களையுங் கொடுத்தவன். இவனையாண்டருள்வீர்" என்றார்.

பகவான் "அன்புடைய பலியே ! நீ சுதலலோகத்தில் சுகமே இருப்பாயாக. உனது வாசலில் நான் எப்போதுமிருந்து உன்னைக்

காப்பாற்றுவேன். உனக்கு நன்மை உண்டாகக்கடவது. இனிவரப் போகிறசாவர்னி மனுவந்தரத்தில் நீ இந்திரனாகப்போகிறாய். நீ எப்போதும் என்னைத் தெரிசித்துக்கொண்டு இருப்பாயாக'' என்று அருள்புரிந்தார் பலியைச் சுதலஉலகத்தில் இருத்தி பகவான் அமரர்கட்கு அமராவதியைக் கொடுத்து அதிதியை மகிழ்வித்து இந்திரனுக்குத் தம்பியென்னும் முறையில் உபேந்திரனாகி விளங்கினார்.

"துகைத்தி வுலகையொ ரடிக்கு ளளவிடு
துலக்க அரிதிரு மருகோனே."
--- திருப்புகழ்'

"வடிவுகுறளாகி மாபலியை
வலியசிறையிட வெளியின் முகடு கிழிபடமுடிய
வளருமுகில்"
---திருவகுப்பு.

"படிமாவலிபால்
மூவடிகேட்டு மூதண்டகூட முகடுமுட்டச்
சேவடி நீட்டும் பெருமான்"
---அலங்காரம்,

விருதுகவிராஜ சிங்கம்:—

சுப்ரமண்ய மூர்த்தியின் சாரூபம் பெற்ற அபரசுப்ரமண்ய மூர்த்திகளில் ஒன்று சுப்ரமண்யத்தின் திருவருள்தாங்கி பரசமய கோளரியாகச் சீகாழில்அவதரித்தது. முக்கண்ணியின் திருமுலைப் பாலுண்டு திருஞானசம்பந்தராக விளங்கி சமண சமயத்தை அழித்து சைவசமயத்தை நிறுவியருளினர். அவர் ஒருவரே கவி ராஜசிங்கம் எனத்தக்கவர். விருதுகள்பல அவர்க்குச்சிவபெருமான் நல்கியருளினர்.

"விருதுகவி விதரண விநோதக் காரப் பெருமாளே."
---திருப்புகழ்.

பரவைமனைமீதிலன்று ஒருபொழுது தூதுசென்ற பரமன் :--

பரமன் பரவையிடத்தில் தூது சென்ற வரலாறு.

சுந்திரமூர்த்தி நாயனர் தம்மைவிடுத்துச் சென்று திரு ஒற்றியூரில் சங்கிலியாரை மணந்துகொண்ட தன்மையையறிந்து பரவைநாச்சியார் தம்மையறியா வெகுளியினால் தறியா நெஞ்சி

ளோடு தளர்ந்திருந்தார். திருவாரூர் வந்தடைந்த நம்பியாரூரர் பரவையார் பிணங்கியிருப்பதை யுணர்ந்து சிலபெரியோர்களை பரவையார் பிணக்கைநீக்குமாறு தூதுவிட்டார். நம்பியருளாற் சென்ற அப்பெரியோர்கள் நங்கைபரவையாரது பைம்பொன் மனையிற் போந்து "எம்பிராட்டிக்கு இதுதகுமோ" என்று பல நியாயங்களை எடுத்துரைத்தார்கள். பரவையார் சினந்தணியாராய் "குற்றமிக்க அவர் விஷயத்தைக் கூறுவீரேல் என்னுயி நீங்கும்" என்றனர். அவர்கள் அஞ்சி யதனை ஆரூரரிடம் கூறலும், பரவையாரது ஊடலால் சுந்தரமூர்த்தி நாயனார் துன்பமாம் பரவையில் மூழ்கி, பேயும் உறங்கும் அப்பேரிருட் கங்குலில் பிறைச்சடைப்பெருமானை நினைத்து "எம்பெருமானே நீரே தூது சென்று பரவையின் ஊடலைத் தீர்த்தருள வேண்டும்," என்று வேண்டினார். அடியார்குறை முடிக்கும் அம்பலக்கூத்தர் நெடியோனுங்காணு அடிகள் படிதோயவந்து தொண்டர்க்குந் தெரிசனந்தந்தருளினார். பெருமானைக்கண்ட வன்றொண்டர் உடல் கம்பித்து உளமுவந்து அடித்தாமரைமேல் வீழ்ந்து, "எம்பெருமானே! தேவரீர் அருள்செய்யத் திருஒற்றியில் சங்கிலியை அடியேன் மணந்துகொண்டதை யுணர்ந்து சினங்கொண்டு. யான் சென்றால் மடிவேன் என்று துணிந்திருக்கின்றாள். நாயனீரே! நான்உமக்கு இந்த அடியேனாகில், நீர் எனக்குத் தாயில் நல்ல தோழருமாந் தம்பிரானாரேயாகில், அறிவழியும் அடியேனுக்காக இவ்விரவேசென்று பரவையின் ஊடலைத் தணித்தருள்வீர்" என்று வேண்டிநின்றார். அன்பையேவேண்டும் அரனார் "துன்ப மொழிக; நினக்குயாம் தூதனாகி இப்பொழுதே பரவையின் பைம்பொன்மனைக்குப் போகின்றோம்" என்று அருள்செய்து

அண்டர் வாழக் கருணையினு லால காலமமுதாக
உண்ட நீல கோலமிடற் றொருவ ரிருவர்க் கரிவறியார்
வண்டு வாழு மலர்க்கூந்தற் பரவை யார்மா ளிகைநோக்கித்
தொண்ட னார்தந் துயர்நீக்கத் தூதனாரா யெழுந்தருள

தேவர்களும் முனிவர்களும் பூதகணங்களும் முன்னும் பின்னும் புறத்துமாகச் சென்றார்கள். தேவர் பூமழை பொழிந்தார்கள் எம்பெருமானது பாதச் சிலம்புகள் ஒலித்தன, அவ்வொலி "மாலு மயனுங் காணாத மலர்த்தாளை வணங்குஞ் சமயம்இதுவே;எல்

லாரும் வம்மின் வம்மின்" என்றுஅறைகூவி அழைப்பதுபோல் இருந்தது. அடியார் தொடரவும், சடைவாழ் அரவுதொடரவும், மறைகள் தொடரவும், வன்றொண்டர் மனமுந் தொடர பெருமான் திருவாரூர் மணிமருகிற் சென்றருளினர். அதுசமயம் அத்திருவீதி சிவலோகம்போல் விளங்கியது. பரவையார் திருமனைக்குப் பரமன்வந்து அனைவரையும் புறத்தேநிற்கச்செய்து தாம் குருக்கள்வடிவு தாங்கி கதவினிடம்சென்று "பாவாய்! மணிக்கதவம்திறவாய்" என்று அழைக்க, பரவையார் துணுக்குற்றெழுந்து அவரை அருச்சிப்போர் என்று நினைந்து வந்து கதவு திறந்துவணங்கி"என்னையாளும் பெருமானே!பேயும் நாயும் உறங்கும் இப்பேரிருட் கங்குலில் நீர் எழுந்தருளிய காரணம்யாது" என்றுவினவினர்.

வேதியராக வந்தவிமலன்,"பரவையே! நான்கூறுவதை மறுக்காமல் செய்வையேல் கூறுவேன்" என்ன, பரவையார், "இசையுமாகில் செய்வேன்; கூறும்" என்றார். பெருமான் "பரவையே! சுந்தரமூர்த்தியை இங்குவர அனுமதிக்க வேண்டும்" என்றார். பரவையார், "சங்கிலித் தோடக்குண்ட அவருக்கு இங்குவருவது தகாது; நீர் கூறியது மிகஅழகியதே" என்னலும் சிவபெருமான் "மடவரலே நம்பியாரூரன் செய்த நகையைக்கருதாது சினந்தணிந்து மறுக்காமல் ஏற்றுக்கொள்ளுவாய்; உன்னை மிகவும் மன்றாடி வேண்டிக் கொள்ளுகிறேன்" என்றார். பரவையார் "ஐயரே!நீர் இக்கருமத்தை மேற்கொண்டு இந்நள்ளிரவில் வந்தது உமது மேன்மைக்குத் தகுதியற்றது. அவரை இங்குவர அனுமதிக்கேன்; செல்லுவீர்." என்று மறுத் துரைத்தார். மணிமிடற்றண்ணல் அன்பனுடன் விளையாடும் காரணமாய் தமது நல்லுருவையவருக்குக் காட்டாமல் "நன்று" என்று திரும்பி தமது வருகையை எதிர்நோக்கியிருந்த நம்பியாரூரர்பால் வந்தார். பிணக்கு தீர்த்தேவந்தார் என்று மகிழ்ந்து பணிந்து "பரவையின் ஊடல்தீர்த்து என்னை யாட்கொண்ட எந்தையே" என்றுதுதித்தார். பெருமான் "அன்பனே! நான்போய்க்கூறியும் பரவை மறுத்துவிட்டாள்" என்று சொன்னர். சுந்தரமூர்த்தி நாயனர் "எம்பெருமானே! அமரருய்ய ஆலமுண்ட அண்ணலே! புரமெரித்த புராதன! பாவியேனை வலியஆட்கொண்ட பரம்கருணை

நிதியே! அடியேனைப் பரவைபால் சேர்க்காவிடில் என் ஆவிநீங்கி விடும்" என்றுவருந்திப் பூமியில்விழுந்தார். நம்பியாரூரரது நடுக்கத்தைக்கண்டு எம்பிரான் திருவுளமிரங்கி "மீண்டும்நாம் சென்று பரவையை சமாதானப்படுத்துகிறோம்" என்றுகூறி. தேவபூத கணர்கள்சூழ தேவதேவர் பரவையார் திருமாளிகைக்கு வருவாரானார்.

அங்கு பரவையார் தம்மிடம்வந்த அருச்சகர் சிவபெருமானே என்று கருத்தினுணர்ந்து "அந்தோ! என்செய்தேன்! தோழருக்காகத் தூதுவந்தவரை அருச்சகர்என்று ஏமாந்து போனேனே! மூவர்க்கு மெட்டாமுழுமுதல்என்று உணராமற் போனேனே! மனவாசகங்கடந்த மகாதேவர் உரையை மறுத்துப்பேசினேனே! என்னைப்போன்ற பாவிகளுமுளரோ" என்று மனம்புழுங்கி, கண்டுயிலாராய் கருத்தழிந்து திருவாயிலையே பார்த்துக்கொண்டிருதார். சென்றடையாத் திருவுடைக்கொன்றை வேணிப் பெருமான் தமது தெய்வத்திருவுருவுடன் தேவரும் முனிவரும் பூதரும் சூழ வந்தருளினர். அம்மாளிகை அக்காலை வெள்ளியங்கிரிபோல் விளங்கிற்று. அதுகண்டு பரவையார் ஆகமும் அகமும் நடுங்கி எதிர்கொண்டு இணையடிகளை இறைஞ்சி நிற்ப, எண்டோளெம்பிரான் "பரவையே! முன்போல் மறுக்காது நம்பியாரூரனை ஏற்றுக்கொள்ளுதி" என்றார். பரவையார் கசிந்து கண்ணீர் பொழிந்து "மறைகட்கு மெட்டாத மகாதேவராகிய நீர் ஓரிரவுமுழுதும் உமது மலரடிசிவப்ப அன்பர்க்காகத் தூது வந்து உழல்வீராகில் அடியேன் சம்மதியாமல்என்செய்பக்கூடும்" என்றார். உடனே பெருமான் உளமுவந்து நங்கையார் வழிவிடச் சென்று நம்பியாரூரர்பால் வந்து "பரவைசினந்தணிந்தாள், இனி நீ செல்லுதி." என்று பணித்து விடைமீது உருக்கரந்தார். சுந்தரர் மகிழ்ந்து பரவையார் மாளிகைக்குவர அம்மையார் பொற் சுண்ணந்தெளித்து, நறுங்கலவைச்சாந்தால் மெழுகி, பூரண கும்பம் வைத்து நாயனரை எதிர்கொண்டு வணங்கி இன்புற்றார்.

இவ்வரலாறு சிவபெருமானது கருணையின் எளிமையையும் அடியாரதுபெருமையையும் நன்கு வெளிப்படுத்துகிறது. இதனை

ஓம் குஹாய நம :

சிவானந்த லஹரீ

(ஆதிசங்கரர் அருளிச்செய்தது)

(335-வது பக்கத் தொடர்ச்சி)

(34) கிம் ப்ரூமஸ்த்வ ஸாஹஸம் பசுபதே கஸ்யாஸ்தி சம்போ பவ
த்தைர்யம் சேத்ருசமாத்மந : ஸ்திதிரியம் சான்யை : கதம் லப்யதே !
ப்ரச்யத்தேவகணம் த்ரஸந் முனிகணம் நச்யத்ப்ரபஞ்சம் லயம்
பச்யந் நிர்பய ஏக ஏவ விஹரத்யானந்த ஸாந்த்ரோபவான் !!

பதவுரை.

பசுபதே	- ஓ ஆன்மாக்களுக்குத் தலைவரே !	கிம்	- என்னவென்று,
		ப்ரூமம்	- சொல்லுவோம்?,
தவ	- உம்முடைய,	ஈத்ருசம்	- இவ்விதமான,
ஸாஹஸம்	- துணிவை,		

லன்றோ பரஞ் சோதியார் சுந்தரமூர்த்தி நாயனாரை அழகாக அடியிற் கண்டவாறு துதிக்கின்றார்.

அரவக லல்கு லார்ப லாசைநீத் தவர்க்கே வீடு
தருவமென் றளவில் வேதஞ் சாற்றிய தலைவன் றன்னைப்
பரவைதன்புலவி தீர்ப்பான் கழு துகண் படுக்கும் பானு
ளிரவினிற் றூதுகொண்டோ னிணையடி முடிமேல் வைப்பாம்

கருத்துரை

உலகளந்த ஊகணைச்செல்வரின் மருகரே! திருஞானசம்பந்தராகத் திருவவதாரம்புரிந்தவரே! பரவைமனைக்குத்தூது சென்ற பரமனது திருப்புதல்வரே! பழநிமலையாண்டவரே! அடியேன் கருவிலிருந்துபிறந்து கலைகள்பலதேரிந்து மதனனல் கருத்தழிந்து சிவநாமங்களைநினையாமல் ஆக்கைக்கே இரைதேடி யுழலாமல் ஆண்டருள்வீர்.

பவத்தைர்யம்ச - தேவரீருடைய தைரியமும்,
கஸ்ய - யாருக்குத்தான்,
அஸ்தி - இருக்கிறது?
இயம் - இந்த,
ஆத்மன: - தன்னுடைய,
ஸ்திதிச்ச - இருப்பும்,
அந்யை : - மற்றவர்களால்,
கதம் - எவ்விதமாய்,
லப்யதே - அடையமுடியும்,
ஆனந்தஸாந்த: - மகிழ்ச்சியினல் நிறைந்தவஞன,
பவான் - நீர்,
ப்ரச்யத்தேவகணம் - தம்முடைய இடத்திலிருந்து நழுவுகின்றதேவ கூட்டங்களையுடையதாயும்,
த்ரஸன்முனிகணம் - பயப்படுகின்ற முனிவர் கூட்டங்களையுடைய தாயும்,
நச்யத்ப்ரபஞ்சம் - நாசத்தையடைகின்ற உலகங்களையுடையதாயுமிருக்கின்ற,
லயம் - உலகமுடிவுகாலத்தை (ஊழிகாலத்தை)
பச்யன் - நீர்பார்க்கின்றவராகி,
நிர்பயம் - பயமில்லாமல்,
ஏக ஏவம் - ஒருவனுகத்தானே,
விஹரதி - விளையாடுகின்ருய்.

பொழிப்புரை.

ஓ பசுபதியே! உமது துணிவும் தைரியமும் யாவர்க்குள ? அவற்றை என்னென்று சொல்லுவேன்? உமது இணையற்ற தன்மையை மற்றவர்களால் அடையமுடியுமா? ஆனந்தசொரூபராகிய நீர் எல்லா அமரர்கணங்களும் முனிக்குழாங்களும் தத்தம் பதவிகளினின்று நழுவி அழியும் உகாந்தகாலத்தில் எள்ளளவும் பயமில்லாமல் பார்த்துக்கொண்டே நீ யொருவராக உலாவுகிறுயன்ருே?

"நள்ளிருளில் நட்டம் பயின்ருடு நாதனே"
"ஊழிமுதல்வன்" --திருவாசகம்.

(35) யோக[3] க்ஷேமதுரம்[4]தர[4]ஸ்யஸகலச்ரேய[3] : ப்ரதோ[3]த்யோகிநோ[3]
த்ருஷ்[3]டாத்ருஷ்[3]ட மதோபதே[3]ச சக்ருதிநோ பா[3]ஹ்யாந்த ரவ்யாபிந : !

ஸர்வஜ்ஞஸ்ய த[3]யாகரஸ்ய ப[4]வத : கிம் வே[3]திதவ்யம் மயா
சம்போ[4] த்வம் பரமாந்[3]தரங்க இதி மே சித்தே ஸ்மராம்யஹம் !!

பதவுரை.

சம்போ - சுககாரணரே !
யோகக்ஷேம துரம்தரஸ்ய - கிடைக்காததகிடைத்தல், கிடைத்ததைக் காப்பாற்றுதல் இவைகளுடைய சுமையைச் சுமக்கிறவராயும்,
ஸகலச்ரேய ப்ரதோத்யோகிந : - எல்லா நன்மைகளையும், வழங்குவதில் முயற்சியை யுடையவராயும்,

த்ருஷ்டாத்ருஷ்ட மதோபதேச க்ருதிந: - காணப்பட்டவைகள் (இகத்திலுள்ளவைகள்) காணப்படாதவைகள் (பரத்திலுள்ளவைகள்) இவ்விரு வகையான அபீஷ்டங்களை யருள்வதில் ஆற்றலுடையவராயும்,	ஸர்வஜ்ஞஸ்ய - எல்லாவற்றையும் அறிந்தவராயும்,
பாஹ்யாந்தரவ்யாபிந: - உள்ளும் வெளியும் இருப்பவைகளை வியாபித்தவராயும்,	தயாகரஸ்ய - கருணைக்கு உறைவிடமானவராயும் இருக்கின்ற,
	பவத: - உமக்கு,
	மயா - அடியேனால்,
	வேதிதவ்யம் - அறிவிக்கத்தக்கது
	கிம் - என்ன இருக்கிறது? (ஒன்றுமில்லை)
	த்வம் - நீர்,
	மே - அடியேனுக்கு,
	பரமாந்தரங்கஇதி - மிகவும் ஆப்தரென்று
	அந்வஹம் - நாள்தோறும்
	சித்தே - மனதில்,
	ஸ்மராமி - நினைத்திருக்கின்றேன்.

பொழிப்புரை.

ஓ சுககாரணரே! கிடைக்கின்ற கிடைக்காத பொருள்களின் சுமையைத் தாங்குகின்றவராயும், இகபரநலன்களை யருள்பவராயும், உள்ளும் புறமும் நீக்கமற நிறைந்திருப்பவராயும், அருளாகராயும் விளங்குகின்ற உம்மைச் சேர்ந்தவனாகிய அடியேன் எல்லாமுணர்ந்த உமக்குத்தெரிவித்துக் கொள்ளதக்கது யாதுளது? உம்மை அடியேனுக்குப் பரமாப்தராக நாள் தோறும் கருதுகின்றேன்.

(36) பக்[4]தோ பக்[4]திகுணாவ்ருதே முதம்ருதாபூர்[3]ணே ப்ரஸந்நேமந:
கும்[4]பே ஸாம்[3]ப தவாங்[4]க்ரிபல்லவயுகம் ஸம்ஸ்[3]தாப்ய ஸம்வித்[2] பலம்[2]!
ஸத்[3]வம் மந்த்ர முதீரயந்நிஜ சரீ[3]ராகார சுத்[3]திம் வ[4]ஹந்
புண்யா ஹம் ப்ரகடீ கரோமி ருசிரம் கல்யாணமாபாதயன்[3]!!

பதவுரை.

ஸாம்ப - அம்பிகையுடன் கூடியவரே!	ருசிரம் - நெடுங்காலமுள்ள (உயர்ந்ததான)
நிஜசரீராகாரசுத்திம் - தன்னுடைய தேகமாகிய வீட்டினதுபரிசுத்தத்தை,	கல்யாணம் - மங்களத்தை (மோக்ஷத்தை)
வஹன் - உண்டுபண்ணுகின்றவனையும்,	ஆபாதயன் - உண்டுபண்ணுகின்றவனுமிருக்கின்ற,
	பக்த: - பக்தனாகிய அடியேன்

ஓம் குஹாய நம :

கந்தர் திருவிளையாடல்

(341-வது பக்கத் தொடர்ச்சி.)

இந்திரன் திருக்கைலாய மலைக்குச் சென்றபின் அவன் நினைத்த கருமம் இனிது நிறைவேறுமாறு இந்திராணி அரம்பையர்சூழச் சீர்காழிவனத்தில் தவஞ் செய்து கொண்டிருந்தாள். நெடுநாளாகத் தன்கணவன் வரக்காணமையால் தேய்பிறை மதி போல் தன்னுடல்தேய அழலிடைப்பட்ட மெழுகுபோல்உள்ளம் உருகிக் கொண்டிருந்தாள். இந்திராணி இங்ஙனமிருக்க,பொறுமை நாணம் கற்பு முதலிய நற்குணங்கள் சிறிதும் இல்லாதவளும்,

---

பக்திகுணவ்ருதே - சேவையாகிற நூலினால்சுற்றப்பட்டும்,
முதம்ருதாபூர்ணே - மகிழ்ச்சியாகிய தண்ணீர்நிறைந்தும்,
ப்ரஸந்நே - ஒளிசெய்யும்,
மந: கும்பே - மனமாகிய குடத்தில்,
அங்க்ரி பல்லவயுகம் - (உமது) திருவடிகளாகிய தளிர்கள் இரண்டையும்,
ஸம்சித்பலம் - ஞானமாகிய தேங்காயையும்,
ஸம்ஸ்தாப்ய - வைத்து.
ஸத்வம் - சத்துவகுண உருவுமுள்ள,
மந்த்ரம் - (பஞ்சாட்சர) மந்திரத்தை,
உதிரயன் - சொல்லுகின்றவனாகி,
புண்யாஹம் - புண்யாகவாசனத்தை,
ப்ரகடீகரோமி - பிரசித்தம் செய்கிறேன்.

பொழிப்புரை.

ஓ சாம்பமூர்த்தி! பக்தனாகிய அடியேன் எனது உடம்பாகிய வீட்டின் தூய்மையையும் அழியாதபேரின்ப சுகத்தையும் பெறும் பொருட்டு, பக்தியாகிய நூலினால் சுற்றப்பட்டதும் சந்தோஷமாகிய தீர்த்தத்தால் நிறைக்கப்பட்டதுமான தூயமனதாகிய கலசத்தில் உமது திருவடித்தாமரைகளாகிய தளிர்களை ஞானமென்னுந் தேங்காயுடன்வைத்து, சத்துகுணவடிவான ஐந்தெழுத்தை ஓதி புண்ணியாகவாசம் என்னும் நற்கருமத்தைச் செய்கின்றேன்.

---(தொடரும்).

கொலை களவு பொய் முதலிய தீச்செயல்கட்கு உறைவிடமான வளும், மிகுந்த காமத்தினால் எவரையும் பிடித்து வலிய அணை பவளும், மூவுலகையும் நொடிப்பொழுதில் சுற்றிவருபவளும், சூர பன்மனது தங்கையும், அஞ்சாதவளுமாகிய அசமுகி என்பாள் துன்முகி என்னுந் தோழியுடன் ஆலகால விடம்போல் ஆங்கு வந்தாள். வந்தவள் அந்நந்தன வனத்தை நோக்கி அதன் பெரு வனப்பால் ஈர்ப்புண்டவளாய் மிகவும் வியந்து அதனழகைத் துன்முகிக்குக் காட்டி "அச்சோலையிலிருப்பார்யார்?" என்று உள்புகுந்தாள். அதனையுணர்ந்த அயிராணியைக் காத்துநிற்கும் மகாகாளர் "இவள் அசமுகி; இவள் செய்வதுயாது? அதனை யுணர்ந்து தண்டிப்பேன்" என்று மறைந்து நின்றார். அசமுகி சோலையைச் சுற்றிப்பார்த்து தவஞ்செய்து கொண்டிருந்த சசி தேவியைக் கண்டாள். கண்டதும் "இவள்தான் இந்திராணி; நமது அண்ணனுக்கு அஞ்சி இங்குவந்து ஒளிந்து தவம்புரிகின்றாள். இவளைத்தேடுமாறு அண்ணன் பலஆட்களை விடுத்திருக்கின்றான். இவளுந்தனியே யிருக்கின்றாள். இந்திரன் வருமுன் துணையற் றுள்ள இவளைக்கொண்டுபோய் அண்ணனுக்குத்தருவேன்" என்று சீறிவந்தாள்.

இந்திராணி அசமுகியைக்கண்டு அஞ்சி எழுந்தாள். அச முகி "இந்திராணியே! கேள். இலக்குமியும் நாணும் கட்டழ குடைய நீ ஏன் உனதுயௌவனத்தை வீணேகழிக்கின்றாய். உன்னைவிரும்பி 108 அண்டங்களுக்குந் தலைவனாகிய சூரபன்மன் தவம்புரிகின்றான். அற்பனாகிய இந்திரனைவெறுத்து மிகப் பெருமையுடைய சூரனைக்கணவனாக அடைவாய்" என்றுபல பிதற்றினாள். அயிராணி இடியேறுண்ட மயில்போல் நடுநடுங்கி செவிகளைப்பொத்தி, "அடிபேதையே! உன்குலத்தையழிக்கவே நீ தோன்றினைபோலும், தீதிலாத கற்புடைய நான் தேவர் கோமானைத்தவிர ஏனையோரை கனவிலுங்கருதேன், விரைந்துபோ" என்றாள். அசமுகி வடவைத்தீயைப்போல் வெகுண்டு "அடி அறி வில்லாதவளே இப்போதே உன்னைக்கொன்றுதின்பேன், என் அண் ணனுக்காகும் என்றுவிட்டுவிட்டேன். சூரனிடம்வா என்றுஇயமன் உயிரை இழுப்பதுபோல் சசிதேவியைப்பற்றி இழுத்துக்கொண்டு

போனாள். இந்திராணி "ஐயகோ" என்று அரற்றி கண்கலுழ்ந்து "அரிகரபுதல்வா ஓலம், ஆண்டருள் முதல்வ ஓலம், பரிவுடன்வருவாய் ஓலம், பண்ணவரேறே ஓலம், கரிமிசைவருவாய் ஓலம், பூரணை கணவா ஓலம், புட்கலைமகிண ஓலம் என்று" ஓலமிட்டனள்.

ஐயனாருடைய படைத்தலைவராகியமகாகாளர் அதனைக்கேட்டு வடிவாளைச்சுழற்றி விரைந்து வந்து "அம்மே! அஞ்சாதே" என்று அபயஸ்தம் தந்து "அடி அசமுகியே! அயிராணியை விடுதி" என்னலும் அசமுகி "என்னைத்தடுக்கவல்லாரும் உளரோ?" என்று ஆர்த்துசூலத்தை எறிந்து எதிர்த்தனள். உடனே மகாகாளர் அசமுகியின் கரச்சூலத்தைத் துணித்தார். அசமுகி மலைகளையும்மரங்கலையும் பறித்து வீசிப் போர் புரிந்தாள். மகாகாளர் அயிராணியைப் பிடித்திருந்த அசமுகியின் கரத்தைத்துணித்து, தனது காலால் உதைத்து உருட்டி, அருகிலிருந்த துன்முகியின்கரத்தையும்வெட்டிவீழ்த்தினார். அசமுகி உதிரஆறு பெருக உருண்டாள்; இந்திராணியை உண்பேன் என்று எழுவாள்; விழுவாள்; போவாள்; வருவாள்; இதழைக்கடிப்பாள்; துடிப்பாள்; தனது பெருமிதத்தை எண்ணி அழுவாள்; "உலகையெல்லாம் அழிப்பேன்" என்று சீறுவாள். இவ்விதம் பலவாறு புலம்பினாள். துன்முகிஒருவாறு அவள் துன்பத்தையாற்றி "சூரபன்மனிடம் சொல்லி முறையிடுவோம், வருவாய்" என்றுதேற்றினாள். அசமுகி எழுந்து அயிராணியைப் பார்த்து "உன்னையும் உன்கணவனையும்எனைய தேவர்களையும் என் தமையனைக் கொண்டு நொடிப் பொழுதில் சிறைப்படுத்துவேன். இன்றேல் அசுராதிபன் தங்கை நானன்று" என்று சபதஞ்செய்து விட்டுப் போனாள்.

மகாகாளர் "அம்மே! நீ அஞ்சற்க; உன்கணவன் வரும்வரை காத்தருள்வன்" என்றார். இந்திராணி கலைமானைப்பிரிந்த பிணைமானைப்போல் மனம்பதைத்து, கணவன் வருகையை நோக்கி தவமிழைத்திருந்தாள். இச்செய்தியை நாரதர் கைலைமலையில் சிவ தெரிசனத்திற்கு உற்ற சமயத்தை நோக்கி யிருந்த இந்திரனிடம் கூறினார். இந்திரன் கேட்டு, சினமும், தமது விதியின் கொடுமை நினைத்து துன்பமும் கொண்டு, திருநந்திதேவரை வணங்கி, "அடியேங்கள் அரனாரது தெரிசனைக்குரிய சமயத்தை எதிர்பார்த்துக்

577

ஓம் குஹாய நம :

கற்பு

(346-வது பக்கத் தொடர்ச்சி)

மக்கட்பிறவிக்கு கல்வியறிவு இன்றியமையாதது. கற்குந் தோறும் கற்குந்தோறும் அறிவு விசாலப்படுகின்றது. அறிவு விசாலப்படுமானல் வாழ்க்கையைப் புனிதமாக நடத்தமுடிகிறது. ஆதலால், இல்வாழ்க்கைக்கு கல்வியறிவு மிகஅவசியம் வேண்டற்பாலதாம். இல்லறத்தில் அதிகப்பொறுப்பு பெண்களிடமே அமைந்துளது என்று சென்ற இதழில் கூறியிருக்கின்றோம். ஆதலால் பெண்மக்கள் அவசியம் கல்விபயிலவேண்டும். அங்ஙனம் பயில்வதற்கு ஏற்றகாலம் இளமையே யாதலால், பெற்றோர்கள் தங்கள் பெண்குழந்தைகளைக் கலாசாலைக்கு அனுப்பி அறிவு நூல்களைப் படிக்கச்செய்ய வேண்டும். பெரும்பாலும் தற்காலப்

கொண்டு நெடுங்காலம் இங்குஇருந்தோம். எமது தீவினையால் அதுகைகூடவில்லை; சிவபெருமான் திருவுளமிரங்குமாறு யாம் தவஞ் செய்யப் பூவுலகத்திற்கே போகின்றோம்" என்று விடைபெற்று, தேவர்களோடு சீர்காழிக்குவந்து, மகாகாளரைத் தழுவி பல இனிய மொழிகளை மொழிந்து ஐயனரிடம் அவரைப் போகவிடுத்து, இந்திராணி தவம்புரியும் இடத்திற்குச்சென்றான். கணவனை வணங்கி சசிதேவி கண்ணீர் பொழிந்தாள். இந்திரன் அவளது துன்பத்தை ஆற்றி, அசமுகிகூறிய சபதமொழிகளை மனைவி கூறக்கேட்டுபயந்து, "இனியாதுசெய்வோம்" என்று வருந்தி தேவர்களுடனும் இந்திராணியுடனும் மேருமலையிற்போய்மறைந்திருந்தான்.

வீரமாகாளராற் கரம் வெட்டுண்ட அசமுகி துன்முகியுடன் வீரமகேந்திரபுரியை அடைந்தாள். அவள் அங்கு செல்லுங்கால் சூரபத்மன் அரசிருந்த சிறப்பைச் சிறிதுசொல்வாம்.

---(தொடரும்).

பள்ளிக்கூடங்களில், சமய அறிவைத்தரும் பாடங்கள் இல்லை. ஆதலால் தாய்தந்தைகள் இரவுகாலத்தில் குழந்தைகளுக்கு சமய அறிவை உரைகளினாலும் புத்தகங்களினாலும் வளர்க்கவேண்டும்.

நமதுநாட்டில் பெண்களில் அநேகமாக நூற்றுக்குஇருவர் கூடப்படித்தவர்களைக்காண்பது அரிதாகிவிட்டது. சமயநூல் இலக்கண நூல் உலகியல்நூல் இவைகளை நன்குகற்ற பெண்மக்கள் ஆயிரத்திற்கு ஒருவர்கூட இல்லை, பெண்கள்படித்தால் கெடுதல் உண்டாகிவிடும் என்ற தப்பான எண்ணம் சிலஇடங்களில் சிலர் மனத்தில் இன்னுங்குடிகொண்டுளது. பெண்கள் படித்து விட்டால் ஆடவர்களை மதிக்கமாட்டார்கள் என்பது ஒரு சிலர் கொள்கை ; யாருக்கோ கடிதம் எழுதிவிடுவார்கள் என்பது மற்றொரு சிலர்கொள்கை ; அன்பர்களே!

சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை.

என்ற பொதுமறையை யுணராதாருடைய இக்கூற்றை உன்னி வருந்துவதா? நகைப்பதா ? என்று தோன்றவில்லை.

கணவனைத்தவிர வேறு கடவுள் இல்லை என்பதையும், கணவன் வாக்கே வேதவாக்கு என்பதையும், கணவனிடம் எவ்வாறு ஒழுகவேண்டும் என்பதையும், கணவனைப் பெற்ற மாமன் மாமிகளிடம் எவ்வாறு நடக்கவேண்டு மென்பதையும், குடும்ப தருமத்தை எவ்வாறு செவ்வையாக வகிப்பதென்பதையும் படித்தாலல்லவா பெண்கள் உணரமுடியும். பரம்பரையாக வந்த அறிவினாலும் இவைகளையுணரலாம். தாய்தந்தைகளின் உபதேசங்களாலும்உணரலாம். ஆயினும் கலையறிவால் தெளிவதும் அவசியமே. பரம்பரையாலும், பெற்றோராலும் உண்டான நல்லறிவு என்னும் பயிர்க்கு கலையறிவு நீர்பாய்ச்சுவது போலாம். நம் நாட்டில் ஒளவையார், மங்கையர்க்கரசியார், திலகவதியம்மையார், தமிழறியும் பெருமாள் முதலிய பலபெண்மக்கள் கலாநிலயங்களாக விளங்கினார்கள் ; புகழுடம்புடன் இன்னும் விளங்குகின்றார்கள்.

கனவிலேயுங்கூட புத்தகங்களைக் கையாலுந் தீண்டியறியாத பெண்கள் பலர் நம் நாட்டில் இருக்கின்றனர். இத்தகைய பெண்

களுக்குக் கலையறிவை யுண்டாக்குஞ் சுமை கணவனது தலையில் தானிருக்கிறது. கணவன் ஒய்ந்த நேரங்களில் மனைவியைத் தனியேயிருத்தி எழுத்துக்களையும் எழுத்துக்களைக் கூட்டிப்படிக்கும் முறைகளையும் சிறிது சிறிதாகக் கற்றுக்கொடுக்கவேண்டும். ஒருநாளைக்கு ஒருமணிநேரம் சொல்லிக் கொடுத்தால் போதும் கணவனால் சொல்லிக்கொடுத்த பாடத்தைப் பெண்கள் சாப்பாட்டுக்குமேல் பகல் நேரத்தில் படித்துச்சிந்தித்து திரும்பவும் பிழையின்றி இரவுகாலத்தில் பாடத்தை ஒப்பித்துபுதுப்பாடம்வாங்கிக் கொள்ளவேண்டும். இப்படி முறையே ஓராண்டு படிக்கில் தாமே படிக்குந் திறத்தை எளிதில் பெறலாம். பிறகு அறிவு வளர்தற்குரிய நீதி நூல் சமயநூல் தோத்திர நூல்களையும் கற்றுக்கொள்ள வேண்டும். மனைவியைக் கணவன் கவனிப்புடன் சிறிது காலம் கலைகளைப்பயில வைத்து விட்டால், பிறகு அவர்களே நூல்களை ஒய்ந்தநேரத்தில் படித்து கலையறிவைப்பெற்று கல்விக்களஞ்சியமாய்வாழ்வார்கள். இக்காட்சியைக் காணுந்தோறும் கணவனுக்கும் பெருங்களிப்பு உண்டாகும். இவ்வாறு கல்வியறிவு பெறுவது மக்களைப் பெற்ற பிறகு அம்மக்களைச் சீராட்டவும் பாராட்டவும் மருந்தளிக்கவும் பாலூட்டவுமாகவே காலம் கழிக்க நேருமாதலால், அப்போது ஒருசிறிதும் படிக்க நேரம் கிடைக்காமல் போய் விடும். ஆதலால், மக்களைப் பெறுவதற்கு முன்னரே இக்கல்வியை ஓரளவில் முடித்துக்கொள்ளவேண்டும்.

கலையறிவுமிருந்த பெண்கள் தமது ஆண்மக்களையும் பெண் மக்களையும் மொழிபயிலும் நாள்தொடங்கியே விளையாடும்போதும் சோறூட்டும் போதும் பேசும்போதும்சிறிதுசிறிதாகக்கல்வியைப் போதிக்கவேண்டும். இவ்வாறு மக்களைக் கலைவல்லுநராகஆக்குவதற்கும் பெண்கல்வி அவசியமாகத்திகழ்கிறது. தவிர, கல்வியறவே சிறிதுமில்லாத நிரக்ஷரகுக்ஷியாகிய வயலில் விளைந்த மக்களும் மூடர்களாக இருப்பர். பெண்கள் படித்திருந்தால் தையல் வேலை, வண்ணான் கணக்கு எழுதுவது முதலிய சிறுவேலைகளையும் அவர்களே பார்த்துக்கொள்ள அநுகூலமுண்டாகிறது. கலையறிவு இல்லாமையால் பெண்கள் கணவனுக்குப்பின் தன்பாண்டுபத்திரங்களையெல்லாம் பிறர்வசம் காட்டி அவர்கள் செய்யும் மோசங்கட்கு

ஆளாகின்றனர். கணவன் படித்த மனைவியுடன் வாழ்வது மிகவும் மகிழ்ச்சியைத்தரும். கணவனும் மனைவியும் இன்பமாகப் பரிகசிக்கும் போதுங்கூட கலைகளின் சம்பந்தமாகவே இருக்க வேண்டும். வழுக்கி விழுந்தாலுங் கூட கலையாகிய சேற்றிலேயே விழவேண்டும்.

மனைவி கற்றவளாயிருக்கில் கணவனுக்கு ஆபத்துநேரங்களில் நல்ல யுக்திகளைச் சொல்லி ஊன்று கோல் போல் துணை செய்வாள். கல்வி யாருக்கும் அறிவை வளர்க்குமேயன்றி அறிவைக்கெடுக்காது. மனைவி படித்தவளாயிருப்பாளேயாமாயின் கணவனும் தான்கற்றகலையின் நுணுக்கங்களையும் தான் புதிதுபுதிதாகக் கலையுலகிற்கண்ட அற்புதங்களையும் அவளோடு சொல்லி இன்புறலாம். ஆடவர்களுக்கு உத்யோகம் வியாபாரம் பலருடன் பேச்சு இவைகளால் அறிவு பலதிறப்பட்டு செலவழிகிறது. பெண்களுக்கு ஒரே நிலையிலிருந்து குன்றாத விளக்கே போல் சுடர் விட்டெரிந்து கொண்டிருக்கும். அவ்விளக்குக்குக் கணவனுடைய நல்லுரை தூண்டுகோலாகத் துணைசெய்ய நிற்கிறது. படித்தவர்களுடன் பேசுவதே ஒரு பெரிய இன்பத்தை விளைவிக்கின்றது. கல்வியறிவு சிறிது மில்லாதவர்களுடன் பழகுவதற்கும் காரெருமைக் கூட்டத்துடன் பழகுவதற்கும் அதிக வேறுபாடு இராது. மொழிக்கு மொழிதித்திக்கப்பேசும் இயல்பு படித்தவர்களுக்கே யுண்டு. இத்தகைய படித்தவர்களை நாடோறும் வெளியிற்றேடிப்போய் பேசுவது என்பது முடியாத காரியமல்லவா? மனைவியே படித்தவளாயிருப்பின் அது எத்துணை மகிழ்ச்சியைத் தரும் என்பது சொல்லவும் வேண்டுமோ?

(தொடரும்).

ஓம்குருஹாயநம:

பலியினால் வரும் பாவம்

எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவுநின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே

கோழிகள்கூவின; கூவின பூங்குயில்; புள்ளினங்கள் வானத்தில் இனிமையாக ஒலிசெய்து கொண்டுஇரைதேடுதற்குச் செல்லத் தொடங்கின. சிவபெருமானைப் பணியவந்த தேவர்களது மணிமுடிகள் ஒளிமழுங்கியதுபோல் நட்சத்திரங்கள் ஒளிமழுங்கின. கதிரவனுடைய உதயத்தின் அறிகுறியான நிமித்தங்கள் பல காணப்பட்டன. ஆலயந்தோறும் கண்டாமணிகள் கடலொலி போல் முழங்கின. ஆலயங்களில் விடியற்காலத்திலேயே சகலவித மேள தாளங்களுடனும் பூஜைநடந்துகொண்டிருந்தன. வீதிகள் தோறும் தேவார திருப்புகழ் திருவருட்பா பாராயணங்கள் நடந்துகொண்டிருந்தன. திருவெம்பாவை படித்துக்கொண்டு பல அன்பர்கள் வழிபாடு செய்துகொண் டிருந்தார்கள். "இன்னும் பொங்கல் பண்டிகை 30 நாள்கள்தான் இருக்கின்றன" என்று சிலர் பேசிக்கொண்டிருந்தார்கள். அந்த ஊரில் ஒவ்வொரு வீட்டிற்கு முன்னும் பூப்பிள்ளையார் வைத்திருந்தது. அதிகாலையான படியால் எதிரில் வரும் ஆள்கள் நன்றாகத் தெரியாமலிருந்தது. பெண்மக்கள் நதியில் நீராடி நீர்க்குடங்களை எடுத்துக்கொண்டு வந்துகொண்டிருந்தார்கள். அந்தவூர் நேபாளத்தைச் சார்ந்திருந்த தனால் குளிர் மிகுதியாகவே யிருந்தது. ஜனங்கள்குளிரைப் பொருள்படுத்தாமல் மார்கழிமாத மாதலால் வைகறையிலேயே எல்லோரும் குளித்துவிட்டு திருநீறணிந்து காண்பதற்கு இனியராக இருந்தார்கள்.

அந்தஊர்க்கோடியிலுள்ள காளிகோயில் பூசாரி காளிமுத்து என்பவன் தனக்கு வருவாய் வரும் அந்தக்காலத்தில் மிகுந்த

மகிழ்ச்சியுடன் காளிகோயிலில் பூசை செய்து கொண்டிருந்தான் பலர்வந்து அவனையே காளிதேவியென்று அவனிடம் தங்கள்குறைகளைச் சொல்லிகொண்டு நின்றார்கள்; அவன் சிறிதுநேரம் சும்மா இருந்து ஸ்........ஸ்.... என்று சிறிதுகண்திறந்து காளியம்மை தன்மேல் ஆவேசித்ததாகப் பாவனைசெய்து பையத்தலையை அவிழ்த்துகொண்டு ஆடி காளியம்மை பேசுவதுபோல் வாய்க்கு வந்ததெல்லாம் பிதற்றி காணிக்கைகளை பறித்துகொண்டிருந்தான். மார்கழிமாத மாதலால் விடியற்காலை எழுந்து தண்ணீரில்முழுகி காளியை பூசித்துத் தயிரன்னம் நிவேதித்து அந்தப் பிரசாதத்தை நாள்தோறும் உண்டுவந்தான். பனியின்வேகத்தாலும் வழக்கந்தவறி விடியற்காலை குளிர்ந்ததண்ணீரில் முழுகியதாலும் தயிரன்னம் உண்டதனாலும் காளிமுத்துப் பூசாரியைச் சுரநோய்பற்றிக் கொண்டது. வருவாயை உத்தேசித்து சுரத்தைப் பொருள்படுத்தாமலேவழக்கப்படி அதிகாலையில்முழுகி தெய்வமாடி வந்தனன்; அதனால்சுரம் கடுமையாக முதிர்ந்து விட்டது. எத்தனைப் போர்வைகளைப் போர்த்தும் குளிர் அடங்கவில்லை. உணவின்கெடுதியால் உண்டான கேடென்று அவனுடைய அறிவில் தோன்றவில்லை தெய்வக்குற்றம் என்று நினைத்தான். அவனைச் சூழ்ந்துள்ளவர்களும் "அப்பா! காளிமுத்து! ஏதோ காளிபூஜையில்குற்றம் செய்துவிட்டாய், அதனால் அம்மன்சீறிவிட்டாள்; அம்மனை வேண்டிக்கொண்டு பூசைபோட வேண்டும்;" என்று சொன்னார்கள்.

காளிமுத்து காளிதேவதைக்கு அபிஷேகம் செய்து பொங்கலிட்டு உடுக்கடித்து ஆடிப்பாட வைத்து இரண்டு ஆட்டுக்குட்டிகளைப் பலியிட்டான். சிலநாளில் காளிமுத்து நோய்நீங்கி பூரண சுகமுற்றான். பழையபடி காளிக்குப் பூசைசெய்து சுவாமிசேவிக்க வருகின்றவர்களை ஏமாற்றிப் பொருள்பறித்து மாலை நேரத்தில் ஆவேச நீரையும் குடித்து காலங்கழித்து வந்தான்.

அந்த நேபாளதேயத்தை அரசாளுகின்ற மன்னன் மகவின்றி தான தருமங்களைச் செய்துதவம்பலசெய்துவந்தான். அப்படியே மந்திரியும் மக்கட்பேறு இன்றி வருந்தினான். சில நாட்களுக்குப் பின் அரசன் மனைவியும் மந்திரி மனைவியும் கருவுற்றார்கள். அரசனும் அமைச்சனும் ஆனந்த வாரிதியில் மூழ்கினார்கள். உரியகாலத்தில் பூமுடித்தல், சீமந்தம், பும்சவனம் முதலிய வைதிக

சடங்குகள் நடந்தன. நல்லநாளில் அரசன் மனைவி ஓர் ஆண் மகனைப் பெற்றெடுத்தாள். எல்லா இலக்கணங்களும் பொருந்தியிருந்த அம்மைந்தனை மன்னன்கண்டு பெருமகிழ்ச்சியுற்முன். அப்படியே மந்திரிக்கு ஆண்மகவுதோன்றியது. புத்திரோத்சவங் கொண்டாடினுர்கள். அந்தணர்கட்கும் ஆதுலர்கட்கும் தானங்கள் வழங்கினுர்கள்: அந்தத்தேசத்திலுள்ள எல்லாக் கோவில்களிலும் அபிஷேக ஆராதனைகளைச் செய்வித்தார்கள்.

குழந்தைகளைத் தொட்டிலிட்டு தாலாட்டிக் கண்ணிற் கருமணியே போற் காப்பாற்றி வந்தார்கள். குழந்தைகள் வளர்ந்தன; பள்ளிக்குச் செல்லும்பருவ முற்றது. அரசகுமாரனும் மந்திரி குமாரனும் வேதங்களையும், ஏனையகலைகளையும் வில்வித்தையையும் பஞ்சகதிகளையும் நன்கு ஓதியுணர்ந்தார்கள். அடக்கம் பொறுமை அமைதி வீரம் பணிவு துணிவுவாய்மை தூய்மை யாதி நற்குணங்கள் யாவும் அம்மைந்தர்களிடம் தங்கியிருந்தன. வளர்பிறைமதி போல்வளர்ந்தார்கள். குடிகள் அனைவருடைய மனத்தையும் ஒருங்கே கொள்ளை கொண்டார்கள். அரசனும் மந்திரியும் தமது மக்களின் குணுதிசயங்களைக்கண்டு அற்புதமுற்றுர்கள்.

அரசன் ஒருநாள் தனதுமந்திரிகளையும் குடிகளையும் வரவழைத்து, "பிரஜைகளே! முதுமைப் பருவத்தால் யான்மிகவும் வருந்துகின்றேன். இனிஎன்னுல் பூமிபாரந் தாங்கமுடியாது. இனி தவவனஞ்சென்று ஆவியீடேறுதற்கு வழிதேடுவேன். ஆதலால், என்மைந்தனுக்கு மகுடாபிஷேகஞ் செய்ய எண்ணியிருக்கின்றேன். உங்கள்நினைவு யாது?" என்று வினவினுன். எல்லோரும் ஒரே மனதாக "சம்மதம்" என்று மகிழ்ச்சியுடன் ஆரவாரித்தார்கள். நாள் குறிப்பிடப்பட்டது; நகரமெங்கும் பறையறையப் பட்டது; தோரணங்கள் நாட்டினுர்கள்; வெண் சுண்ணச்சாந்தால் வீடுகளை அலங்கரித்தார்கள்; வீதிகளில் சந்தனக் கலவைகளால் மெழுகிக் கோலமிட்டார்கள். அந்தவூர் இந்திரலோகம்போல் இலகின. 108 பொற்குடங்களில் தீர்த்தத்தை வேதியர்கள் எடுத்து யானைகள்மீது வைத்து மங்கல வாத்தியங்களுடன் கொண்டுவந்தார்கள். குறித்த காலத்தில் அரசன் தன் மைந்தனுக்கு மகுடாபிஷேகம் செய்து வைத்தான். அதேநேரத்தில் மந்திரி தன் மைந்தனுக்கு மந்திரிப்பதவியைக் கொடுத்தான். அரசனும் மந்திரியும் பல தானதருமங்களை செய்து தவவனம்புகுந்து தவமேற் கொண்டார்கள்.

மன்னன் மைந்தனும் மந்திரி மைந்தனும் உலகத்தை அரசாட்சி செய்துவந்தார்கள். குடிகளிடத்தில் மிகவுங் கருணை பாராட்டினுர்கள். அவர்களுக்கு பட்டாபிஷேகமான பன்னிரண்டு ஆண்டுகளாக மழை பொழியவில்லை.

விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது

என்ற பொய்யா மொழிப்படி ஆடு மாடுகட்குப் புல்லுங் கிடைப்பது அரிதாயிற்று. உண்ணீருமின்றி மனிதர்கள் தத்தளித்தார்கள். எங்கும் பஞ்சம் மிகுந்தது. அந்த ஊரில் எறும்புகட்கும் உணவு கிடைப்பது அரிதாக முடிந்தது. பசியும் நோயும் மிகுந்தன. அரசகுமாரன் பல அறச்சாலைகள் வைத்து ஏழைகளின் பசியையாற்றி இன்முகங்காட்டி யுபசரித்தான். எத்துணை அன்னதானஞ் செய்தும் ஜனங்கள் "பசிபசி" என்று ஏங்கினார்கள். சிறு குழந்தைகள் பாலின்றிப் பரதவித்தன; ஆவினங்கள் உணவின்றி அலைந்தன; பறவைகள் இரையின்றி கூவின. இப்படி எங்கும் துர்பிக்ஷம் உண்டானதைக் கண்டு மன்னன்மகன் வருந்தி மந்திரிமகனை நோக்கி, "ஆர்வல! நம்மிருவருக்கும் முடிசூட்டிய பன்னிரண்டு ஆண்டுகளாக வானம் வழங்காதாயிற்று. சராசரங்களெல்லாம் உணவின்றி மடிகின்றன. நமது அரசாட்சியின் குற்றமோ? அல்லது வேறு குற்றமோ? அறிகிலேம். நமது கிராம தேவதையாகிய காளியம்மையை வினவி யறிவோம்; வருதி" என்று மந்திரிகுமாரனை அழைத்துக்கொண்டு தேரூர்ந்து ஊர்ப்புறத்தி லுள்ள காளி கோயிலையடைந்து, தேர்விட்டிறங்கி பயபக்தியுடன் கோயிலுக்குள் நுழைவானாயினான். அக்கோயில் பூசாரியாகிய நமது (முன்கூறியபடி சுராம்வந்து சுகமுற்றவன்) காளிமுத்து அரசகுமாரனும் மந்திரிகுமாரனும் ஆயுதபாணிகளாய் ஒருநாளுமின்றி காளிகோயிலுக்குள் நுழைவதைக் கண்டு, உடல்நடுங்கி உள்ளம் அஞ்சி "நாம் ஏதோ குற்றம் செய்துவிட்டோம் போலும்? நாள் தோறும் கோயிலுக்கு வருபவர்களிடம் நாம் பொய்யாக ஆவேசமாடிப் பணம்பறிப்பதை மன்னனுக்கு யாரோ தெரிவித்து விட்டார்கள்போலும்? அதனால் அரசன் சினந்து நம்மை தண்டித்து ஒறுக்க வந்துவிட்டார்"; என்று எண்ணி, இன்னது செய்வது என்று தோன்றாய் உடனே காளியம்மைக்குப் பின்புறத்திற் பதுங்கி ஒளிந்துகொண்டான்.

அரசகுமாரன் மந்திரிமகனுடன் கோயிலுட்புகுந்து காளிதேவதையை வணங்கி, வலம்வந்துகைகூப்பி நின்று "ஏ அகிலாண்ட கோடி யீன்ற அன்னையே! தீன தயாபரி! திரிபுரசுந்தரி! கருணாகரி! எனதுநாட்டில் மழைத்துளியின்றி மக்கள் வாடுகின்றனரே; இந்தப் பாவியேனுக்கு மகுடந்தரித்த பன்னிரண்டு ஆண்டுகளாக மழையில்லாத காரணம் யாது? என்மாட்டு ஏதாவது குற்றம் உளதா? எம்பெருமாட்டியே! அடியேன் அறிவுவந்தகாலந் தொடங்கி மனத்தாலேனும் வாக்காலேனும் காயத்தாலேனும் பிறவுயிர்கட்குத் தீங்கு செய்யவில்லையென்பது நின் திருவுள

மறியாதோ? அகிலாண்டநாயகி! கருணைக்கடலாகிய என்னிடம் கருணை காட்டாமல் வெறுத்துவிட்டால் இக்கணமே நின் திருவடியில் என் உயிரை ஒப்பிக்கிறேன்" என்று கண்ணீர்ததும்பி நாக்குழற கல்லுங்கரைய முறையிட்டான்.

காளியம்மை அவன் முறைக்கு இரங்கி, "அரசகுமார! நின் அறநெறிக்கும் பக்தியின் மிகுதிக்கும் மகிழ்கின்றோம். நமது சந்நிதியில் ஒரு நரபலிகொடுத்தால் மழை பொழியும்" என்று அசரீரியாக மொழிந்தாள். மன்னன் கேட்டு மகிழ்ந்து, "மதியின்மிக்க மந்திரியே! அம்பிகையின் திருமொழியினைக் கேட்டனையோ; குடிகளுக்கு நேர்ந்த இன்னலை நீக்குவது அரசன்கடமையாம். குடிகளுக்கு அரசன் தந்தை ஆதலால், என் மக்களாகிய ஜனங்கள் சுகமுறும்பொருட்டு இக்கணமே இங்கு என்னைப் பலிகொடுத்துவிடு; நீ அரசனுக இருந்து உலகத்தை மனுநெறிதவருமல் அரசாளுதி" என்ருன். மந்திரி கேட்டு மனந்துடித்து "மன்னர் மன்ன! நம் குடிகள் சுகமுறும்பொருட்டு அடியேனைப் பலியிடுவீர்; அடியேன் இல்லையானுலன்றோ வேறு யோசிக்க வேண்டும்.

உடுக்கை யிழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதா நட்பு.

என்றபடி இத்துணைநாள் உம்முடன் ஒருங்கு வளர்ந்து படித்து நட்புற்ற யான் இதற்குத் துணைசெய்யேனுயின் உடலினுலாய பயன்தான் என்ன இருக்கிறது? ஆதலால், என்னைப் பலியிடும்" என்ருன். அரச குமாரன் "மந்திரி! என்னே நின் தகைமை? குழந்தைக்கு நோய்வந்தால் தாய் மருந்துண்பதா அடுத்தவள் மருந்தருந்துவதா? என் மக்களாகிய பிரஜைகளின் நன்மைக்கு நானல்லவா பலியாகவேண்டும்; என் ஆணையை மறுக்காதே. என்னைப்பலியிடுக" என்ருன். இப்படி இருவருக்கும் "என்னைப் பலியிடு" "என்னைப் பலியிடு" என்று வாதம் நிகழ்ந்தது. அரசகுமாரன் "மந்திரி! நில்லு; காளிதேவியைக் கேட்போம். காளி உன்னைப் பலியிடச்சொன்னுல் செய்வோம்; அன்றி என்னையிடச் சொன்னுல் அதுபடி செய்வோம். அம்பிகையின் திருவுளப்படி நடப்போம்; வீணில் வாதம் வேண்டாம்" என்று கூறி, காளியை நோக்கி "அந்தரி! அகோரி! வீரி, பராத்பரி! நான் பலியாகவோ? இந்த மந்திரி பலியாகவோ? நின் திருவுளம் யாது?" என்ருன்.

காளிதேவி "அரச புதல்வ! எனக்குப்பலி நீயும்ஆகவேண்டா மந்திரியும் வேண்டா ; என்பிறகே ஒளிந்திருக்கின்ற பூசாரிதான் பலியாகவேண்டும்" என்ருள். இதனைக்கேட்ட பூசாரி இடியேறுண்ட நாகம்போல் நடு நடுங்கி வெளியே வந்து, காளியைப்பார்த்து

"அடிபாவி! என்னுயிர்க்குத்தானு உலைவைக்க வேண்டும்; 50 ஆண்டுகளாக உன்னைப் பூஜை செய்ததற்குப் பயன் இதுதானு? அந்தோ! என்னைப் பலிவாங்குவது உனக்குச் சம்மதமா? இதுவா நின் கருணை? பாழுந்தெய்வமே! பலிவாங்குந் தெய்வமே! நீ உலக மாதா என்று பேர்படைத் திருக்கின்றனையே? உன் குழந்தை களில் நான் ஒருவனல்லவா? ஐயோ! என்னை வீணே பலிவாங்க எண்ணினையே; இது தகுமா? இது முறையோ? இதுவ் தருமந் தானே? யாருங் கேட்பாரில்லையா?" என்று அலறினுன்.

காளிதேவி "பூசாரியே! சற்று அமைதியுடன்கேள்; உன்னைப் பலிவாங்க வேண்டுமென்று நான்விரும்பவில்லை; நீ செய்த பாவம் விரும்புகிறது; அறிவிலியே! சில ஆண்டுகளுக்குமுன் மார்கழி மாதம் விடியற்காலை தண்ணீரில் முழுகித் தயிரன்னம் அருந்திய தால் உனக்குச் சுரநோய்கண்டது. உணவின் மாறுபாட்டால் வந்த சுரநோய்க்கும் அந்தோ! சும்மாயிருந்த ஆட்டுக்கும் என்ன சம்பந்தம்? அக்காலை நீ இரண்டு ஆடுகளைக்கொணர்ந்து பலியிட் டனை; அந்த இரண்டு ஆடுகளும் தாம் செய்த நல்வினைப்பயனுல் அரச குமாரனுகவும் மந்திரி குமாரனுகவும் பிறந்து உன்னைப் பலி வாங்க வந்திருக்கின்றன. மாம்ச:--என்ற சொல்லுக்குப் பொருள் யாது என்பதை நீஉணரவில்லைபோலும். மாம்-என்னை, ஸ: -உன்னை. "இந்தப்பிறப்பில் என்னைத் துன்புறுத் துகின்ருய்; அடுத்தப் பிறப் பில் உன்னைத் துன்புறுத்த நானே வருவேன்" என்று அந்தச் சொல்லே கூறுகிறது. மூடனே! "நீ உலக மாதாவல்லவா? உன் குழந்தைகளில் யான் ஒருவனல்லவா? என்னைப் பலிவாங்கலாமா?" என்று பிதற்றினையே. நீ எனக்குக் குழந்தையே; உன்னைப்போல் எனக்கு ஆடும் குழந்தைதானே? கோழி பன்றி எருமை முதலிய எல்லா உயிர்கட்கும் நான் தாயல்லவா? ஒரு தாயாருக்கு பல குழந்தைகளிருந்து ஒரு குழந்தை ஊமையாக இருந்தால் அவளுக்கு வாயில்லாக் குழந்தையின்மேல் அதிக அன்பும் ஆதரவும் இருக்கு மல்லவா? அதுபோல் மனிதக்குழந்தைகளைவிட ஆடு மாடு கோழி பன்றி முதலிய வாயில்லாக் குழந்தைகளிடம் அதிகஅன்பு உண்டு அந்தக் குழந்தைகளை யாருங் கேட்பாரில்லையென்று அந்தோ! கொடும்பாவிகள் என்முன் பலியிடும்போது என் உள்ளந்துடிக் கிறது. நான் கண்டால் மிக வருந்துவேனென்று திரையிட்டு திரைக்கு அப்பாலிருந்து வெட்டுகிறுர்கள். அப்படிப் பலியிடுகின்ற பாவிகளுக்கு நான் அந்தப்பிறப்பிலும் மறுபிறப்பிலும் தரித் திரத்தையும், குஷ்டம், க்ஷயம், குன்மம் முதலிய நோய்களையும், குருடு செவிடு முடம் முதலிய அங்கவீனங்களையும் உண்டாக்கு கின்றேன். அதனைக் கண்டும் அறிவில்லாமல் சதா என்முன் என்வாயில்லாக் குழந்தைகளை கதறக்கதற வெட்டிப் பலியிடு

கிருர்கள். அக்கொடுமையை எண்ணுந்தோறும் என் இதயந்துடிக்கிறது. இவர்களுக்கு முற்பிறப்பிற்செய்த தீவினையால் நோய் வந்தால் ஆடு கோழிகள் என் செய்தன? அவைகளைப்பலியிடுவதனுல் வரும் பயன்யாது? பலியிடுவதனுல் உலகில் இறப்பதே இல்லையா?

ஒரு தாய் தன் மூத்த குழந்தைகள் சற்று வலியுடையவர்களாயிருந்த வலியில்லாத இளங்குழந்தைகளைக்கொன்ருல் அவள் பொறுப்பாளா? அது அவளுக்குத் திருப்தியைத்தருமா? ஐயோ! ஏழைப்பிராணிகளைக்கொண்டு என்பேர் வைத்துக் கொன்று தின்று திரியும் இப்பாவிகளுக்கு இருபத்தெட்டு நரகங்களும் போதாதே? பூசாரியே! நன்கு இவைகளை எண்ணிப்பார்; உனக்கே விளங்கும்.

பிறர்க்கின்னு முற்பகற் செய்யில் தமக்கின்னு
பிற்பகல் தாமே வரும்.

என்ற பொதுமறையை நீ படிக்கவில்லையானுலும் கேட்டதுமில்லையா? நீ செய்த வினையை நீதானே அனுபவிக்கவேண்டும்? என்னை வீணே வைது இன்னும் பாவத்தைத் தேடிக்கொள்கின்ருய்? ஆதலால், எந்த உயிரை எவன் கொல்லுகிருனே மறுபிறப்பில் அந்தஉயிர் அவனைக்கொல்லவருகிறது.. பலியினுல்வரும் பாவத்தை இப்பொழுதாவது உணர்ந்து இனி வருபிறப்பிலாவது கொலைத் தொழிலும் புலைப்புசிப்பும் இல்லாத தூயவனுகப் பிறக்கவேண்டும் என்று தெய்வத்தை வேண்டிக்கொள். குற்றத்தை ஒப்புக் கொண்டு அக்குற்றத்தை நினைந்து "தவறுசெய்து விட்டோமே" என்று வருந்தினுல் அந்தப்பாவத்தின் பயன் குறைகிறது. இனியாவது நின் மனத்தில் கருணையுண்டாகட்டும்" என்றுகாளிதேவி சொல்லினுள்.

இவற்றைக் கருத்தூன்றிக்கேட்ட காளிமுத்துப் பூசாரி உண்மை யுணர்ந்து தான்செய்த பாவத்தை எண்ணி எண்ணி மனம்பதைத்து "தாயே! ஆம், அடியேன் செய்தது பெருந்தவறு. அந்தோ! அந்தோ! கருணைமிக்க சன்மார்க்க சங்கத்தில் சேராமல் வீணே பொய்யாவேசம்ஆடி உயிர்களைப் பலியிட்டு தூய தெய்வக்கோயிலையும் சுடுகாடாக்கி கள் குடித்து மருளாடிக்கெட்டேன். என் வரலாற்றை யறிந்தாவது இனிஉலகம் உய்க. என்னைப் போன்ற மருளாடிகள்சொல்லைநம்பி இனியாவது உலகில்வாயில்லா ஊமைப் பிராணிகளைப் பலியிடா திருக்கட்டும். குடிவெறி கொண்ட குடிகெடுக்கும் பூசாரிகள் உடுக்கடித்து தங்கள்மேல் தெய்வமே வந்துவிட்டதாகக் கூக்குரலிடும் பொய்ப் பித்தலாட்டத்தைக் கண்டு மக்கள் ஏமாருதிருக்கட்டும், ஐயோ! இரண்டே ஆடு

18595

களை வெட்டியதற்கே எனக்கு இந்தக்கதி வந்ததென்றால் கணக்கற்ற ஆடு கோழிகளைப்பலியிடும் பேதைகளுக்கு மறுபிறப்பில் என்ன கதி வருமோ? மேலும் சிறு குழந்தைகளிடத்தில் தாய்க்கு அதிக அன்பு என்பது உலகமறிந்ததாயிற்றே. சிறு சிறு ஆட்டுக்குட்டிகளைப்பலியிடும் வன்கணவர் மீளாநரகுக்கு ஆளாவரே! பலியினால் வரும் பாவத்தைத்தெரிந்து உலகம் பலியை விலக்கி பாற்பொங்கலிட்டு அம்பிகையின் அருளைப்பெறுக. அரசகுமாரரே! இந்தப் பாவியைத் தாமதிக்காமல் பலியிட்டு என்பாவத்தை நீக்கியருள்வீர்" என்று பணிந்து காளிக்குமுன் தலைகுனிந்து நின்றான்.

அரசகுமாரன் காளிதேவியின் ஆணைக்கு அஞ்சி தனது உடைவாளால் அப்பூசாரியைப் பலியிட்டான். உடனே "அந்தோ நானும் இவனுடன்பலியாகின்றேன்" என்று தன்னையும்வெட்டிக் கொள்ளத் துணிந்தான். அப்போது காளிதேவி பிரசன்னமாகி அரசகுமாரனைத் தகைந்து, "அறமிகு செல்வ! நின் கருணைக்கு மகிழ்வுற்றேம்; நினக்கு வேண்டும் வரம்யாது?" என்று வினவினாள். அரசகுமாரன் அம்பிகையை வணங்கி "உலகீன்ற அன்னையே! இவன் அறியாமையாற் செய்த இப்பிழையை மன்னிக்க வேண்டும். குற்றத்தை உணர்ந்து வருந்தியபோதே பாவம் மன்னிக்கப்படுகிறதல்லவா? ஆதலால் இப்பூசாரியை எழுப்பித் தருவதே எனக்கு முதல் வரமாக நீர் கொடுத்தருளல்வேண்டும்" என்றான்.

காளியம்மை பூசாரியை எழுப்பித்தந்து மழைபொழிவித்து தண்ணருள் செய்து மறைந்தாள். அந்த பூசாரி அன்றுதொடங்கி பலியினால் வரும் பாவத்தை எல்லோருக்கும் விளக்கிச்சொல்லுவதே தனது வாழ்க்கையின் பயனாகக்கொண்டு பலிவிலக்குத் தொண்டு புரிந்து முடிவில் நற்கதியடைந்தான். அரசகுமாரன் மந்திரிகுமாரனுடன் இந்த அற்புதங்களைக் கண்டுஇறும்பூதுற்று தனது குடிகளையெல்லாம் தன்னுயிர்போல் மன்னுயிரைக்காக்குமாறு செய்து அரசாட்சி செய்துவந்தான். காலந்தோறும் வானம் வழங்கியது. பயிர் தழைத்தது. பசியென்பது பறந்தோடியது. மிடிவிலகியது. செல்வங் கொழித்தது. ஜீவகாருண்யம் அந்நாட்டில் தாண்டவமாடியது. கொல்லாவிரதமே எங்கும் குடிகொண்டது. எல்லோரும் இன்புற்றிருந்தார்கள்.

கொல்லா விரதங் குவலயம் எல்லாம் ஓங்க
எல்லார்க்குஞ் சொல்லுவது என் இச்சை பராபரமே,

கொல்லாமை வாழ்க குமரன்தாள் வாழ்க.